


# கலார்த்தனா

# 2017

## நல்லாயன் மகளிர் கல்லூரி
## கண்டி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ANOKI
JEWELLERS
Your Partner in Gold



# 72, Yatinuwara Veediya, Kandy.
Tel : 081 2232 932
Mobile: 071 2764 162
E-mail: support@anokijewellers.com
www.anokijewellers.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரி

தமிழ் இலக்கிய மன்றம் பெருமையுடன் வழங்கும்

# கலார்த்தனா

## 2017

பிரதம அதிதி

முதுநிலை விரிவுரையாளர்

**கலாநிதி (திருமதி) சோதிமலர் ரவீந்திரன்**

B.A(Hons), M.Phil, Ph.D

தமிழ்த்துறை,

கலைப்பீடம்,

பேராதனைப் பல்கலைக்கழகம்.

கௌரவ அதிதி

**அதி வண. அருட்தந்தை மில்றோய் பொன்சேகா**

முகாமையாளர், கத்தோலிக்கப் பாடசாலைகள்

காலம் : **28.06.2017**

நேரம் : **மு.ப. 8.30 மணி**

இடம் : **பாடசாலை பிரதான மண்டபம்**

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்

தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SCHOOL ANTHEM

*Triumphantly we raise it the standard of our School*
*oh may we ev'r be faithful to our Alma Mater's rule*
*May Fortiter et Suaviter our motto ever be*
*May all we do, all we pursue proclaim nobility*

*In former days what a mead of praise*
*Was by our students keen*
*And shall we of a later age be content with what is mean*
*No. Excelsior shall ever be our cry to greater heights more noble*
*We'll play the game not ask for fame*
*Ne'er hesitate for trouble*

*As long as School days last nay more*
*Until our life's last breath*
*We'll e'er be true, dear School to you*
*Aye, true to you till death*
*So hoist the standard, raise it high*
*Our ideals higher still*
*For God and Country, Creed and School*
*We'll work with ready will*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ் மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

~ சுப்ரமணிய பாரதியார் ~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதம அதிதியின் வாழ்த்துரை

மலையகத்தின் எழில்மிகு தலைநகரம் கண்டி மாநகரின் தனித்துவமிக்க நல்லாயன் மகளிர் கல்லூரியின் கலாசார தினத்தன்று வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழின் இயல், இசை, நாடகம் போன்ற கலைகள் பண்டைய தமிழ் மக்களின் கலாசாரப் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்பட்டன. அதேவேளை, தமிழ்மக்களின் கலாசாரமானது சமயத்துடன் இணைந்தே வளர்ந்து வந்துள்ளது. தமிழரின் பண்பாட்டை வெளிப்படுத்துவதில் இதிகாச புராணங்களும் சிலப்பதிகாரம் போன்ற காவியங்களும் பெரும்பங்கினை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

வரலாற்றில் மறைந்து போதல் என்பது உயிரினங்களுக்கு மட்டுமல்ல, கலாசார பண்பாடுகளுக்கும் அது பொருந்துவதாக உள்ளது. பல்லினப் பண்பாட்டுச் சூழலில் தமிழர் தம் பண்பாட்டின் தனித்துவத்தினை பேணுவது கடினமானதே. இயந்திரமாக இயங்கிக் கொண்டிருக்கும் மக்களின் மத்தியில் கலாசாரத்தைக் கட்டிக் காப்பதென்பது பிரச்சினையாகவே உள்ளது.

தமிழர் தம் கலாசாரத்தை இழிவாகக் கருதுவதும் மேல்நாட்டுப் பாணியில் வாழமுற்படுவதும் எமது கலாசாரப் பண்பாடுகள் அருகுவதற்கும் அழிவதற்கும் காரணமாகின்றன.

முத்தமிழும் கலந்து அணிசேர்க்கும் இவ்விழா தொடர்ந்து வரும் காலங்களிலும் சிறப்பாக நடைபெற எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழராய் நின்று தமிழ் கலாசாரத்தைக்
கட்டிக் காக்க கரம் கோர்ப்போமாக!

நன்றி

கலாநிதி. சோதிமலர் ரவீந்திரன்
தமிழ்த்துறை
கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Message from the Principal**

I am happy to send this message to the magazine to be published on the occasion of "Tamil Day".

A language is a living, breathing force that encompasses culture and tradition. Culture is life itself and finds beautiful expression in the form of song, dance, drama. These unfold in a variety of ways giving tremendous joy, refreshment and relaxation to human being. In today's busy world, it is imperative that people find ways of relaxing and experiencing peace and serenity.

The celebration of Tamil Day will provide an opportunity not only to showcase the talents of our students but also to experience Aesthetic satisfaction.

I congratulate the students and teachers in-charge for striving hard to make this day a successful and memorable one. May this event be a joy to everyone and may different cultures continue to flourish in our midst.

Learn more about culture and enjoy the day.

**Rev. Sr. Mary Chandrika Perera**
**Principal**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழ்ப் பிரிவுத் தலைமை ஆசிரியை வாழ்த்துமடல்

கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றமானது முத்தமிழுக்கும் விழாவெடுக்கும் இந் நன்னாளில் எனது வாழ்த்துரையை வழங்குவதில் அகமகிழ்வு கொள்கின்றேன்.

முத்தமிழின் பெருமைகளை அரங்கேற்ற நம் தமிழ் இலக்கிய மன்றம் ஆற்றிவரும் பணிகள் அளப்பரியன. செந்தமிழைச் செழிக்கச் செய்ய இவ்வருடம் "கலார்த்தனா" இதழானது மலர்ந்துள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

இலை மறை காயாக மறைந்துள்ள எம் மாணவியரின் திறமைகளை உள்ளங்கை நெல்லிக்கனியாக வெளி உலகுக்குக் கொண்டுவர இவ்விதழ் களமாக அமைவதை இட்டு நான் பெருமகிழ்வு கொள்வதுடன் இவ்விதழ் மலர்வதற்கு உறுதுணையாய் இருந்து ஆதரவளித்து நெறிப்படுத்திய எமது கல்லூரி அதிபருக்கும், இவ்விழா சிறப்புற அமைவதற்கு அயராது உழைத்த ஆசிரியர்களுக்கும் தமிழ் இலக்கிய மன்ற உறுப்பினர்களுக்கும் ஆர்வத்துடன் தம் ஆக்கங்களை அள்ளிக்குவித்து இதழை மெருகூட்டிய மாணவியருக்கும் அவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோருக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் இலக்கிய மன்றம் வழங்கும் "கலார்த்தனா" கலை விழாவும் இதழ் வெளியீடும் சிறப்புற அமைய இறையாசியை வேண்டி நிற்பதுடன் இவ் விழாவின் வெற்றிக்கு என் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

"செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்"

திருமதி. தெ. ஆஷா
தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழ் செழிக்க வாழ்த்துகிறேன்.

கண்டி மாநகரின் மிகச் சிறந்த கல்லூரிகளுள் ஒன்றாகத் திகழும் கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரியானது முத்தமிழையும் ஆராதிக்கும் "கலார்த்தனா" கலை விழாவினை மிகச் சிறப்புடன் நடாத்துவதை இட்டு நான் அகமகிழ்வடைகின்றேன்.

இவ்வருட இலக்கிய மன்ற உறுப்பினர்களின் அயராத உழைப்பும் உத்வேகமும், "கலார்த்தனா" சஞ்சிகையின் உதயத்திற்கு வழிவகுத்து மாணவியர் திறமைகளுக்குக் களம் சமைத்துக் கொடுத்து கன்னித் தமிழின் நறுஞ்சுவையை நுகர்ந்திடச் செய்தமை பெருமைக்குரிய விடயமாகும்.

மேலும் இவ்வருட வலய மட்டத் தமிழ்த்தினப் போட்டிகளில் எமது பாடசாலை மாணவியர் தமது திறமைகளை வெளிப்படுத்தி பல வெற்றிகளைப் பெற்றதுடன் மாகாண மட்டத் தமிழ்த் தினப் போட்டிகளிலும் கலந்து தமது வெற்றிகளை நிலைநாட்டியமை எமது மன்றச் செயற்பாடுகளுக்குக் கிடைத்த பெருவெற்றியாகும்.

மாணவர்களின் திறமைகளின் கல்வெட்டாய் அமையும் இச்சஞ்சிகையானது கருவாகி உருவாகிப் பிறப்பெடுக்க உறுதுணையாய் நின்ற எமது கல்லூரி அதிபர், தமிழ்ப் பிரிவுத் தலைவி, சக ஆசிரியர்கள், தமிழ் இலக்கிய மன்ற உறுப்பினர்கள், பெற்றோர்கள், நிதியுதவி அள்ளித் தந்த அன்புள்ளங்கள், ஆக்கங்களால் அலங்கரித்த எனது மாணவச் செல்வங்கள், கல்லூரி நிர்வாக ஊழியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் யாவருக்கும் எனது நன்றியை நவின்று கலை விழா சிறப்புற அமைய வாழ்த்தி மகிழ்வடைகின்றேன்.

"இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"

திருமதி. பத்மலதா சசேந்திரன் தேவர்
பொறுப்பாசிரியை
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "தெள்ளுற்ற தமிழமுதை வாழ்த்துகிறேன்"

"எண்ணிய முடித்தல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

**ஆ**திசிவன் பெற்றெடுத்து, ஆரிய மைந்தன் அகத்தியன் எனும் வேதியன் கண்டு மகிழ்ந்து இலக்கணஞ் செய்து கொடுத்து மூன்று குலத் தமிழ் மன்னர்களும் நல்லன்போடு வளர்த்த தமிழை முத்தமிழின் பொக்கிசத்தை முக்கடலும் மூழ்கி முத்தெடுக்க விழைந்து வீறு கொண்ட வேங்கைகளாய் என் மாணவியர் முன்னெடுத்த இக் கலைப் பயணத்தில் மூவேந்தர் வீரம் கண்டு மெய்சிலிர்த்து நின்றேன். பாரதி படைத்த புதுமைப் பெண்ணைக் கண்டு அகமகிழ்ந்து நின்றேன். அயராத இக் கலைப் பயணத்தின் ஆழி முத்தாய் "கலார்த்தனா" சஞ்சிகையின் முகிழ்ப்பதனில் நானும் ஓர் திசைகாட்டியாய் அமைந்ததில் பெருமிதம் கொள்கின்றேன்.

நனிசுவை கொட்டும் நறுமண இதழாய் மாணவர் இதய ஓடைகளில் சென்று ஆற்றலெனும் நீரை அள்ளி இறைக்கும் தமிழ் மணம் கமழும் இக் கலைப் பொக்கிசம் எழிலுடன் எமது கரங்களில் தவழ நிதியினை மழைபோல் வாரியிறைத்தவர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், பெற்றோர்களுக்கும், ஆக்கங்களை அள்ளிக் குவித்த எம் மாணவியருக்கும் எம்மை ஊக்கமூட்டிய எமது அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் என் நன்றியெனும் ஆரத்தைச் சூட்டி மகிழ்வதோடு வீறு கொண்ட இப்பயணம் மண்ணில் வீழ்ந்திடாது மடை உடைத்துப் பாய மனதார வாழ்த்துகின்றேன்.

"தமிழே! நீ ஓர் பூக்காடு, நானோர் தும்பி!"

திருமதி. L.T. ஸ்ரீகுமாரன்
இதழாசிரியை
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தலைவரின் உள்ளத்தில் இருந்து

### "நாம் வாழ்வது தமிழ் வளர்க்க
### தமிழ் வளர்வது கலைகள் தழைத்தோங்க"

ஆன்றோரும், சான்றோரும் அரும்பாடுபட்டு வளர்த்த தமிழானது, இன்று அண்டசராசரம் அனைத்தும் கொண்டாடும் களஞ்சியமாக, அறிவுநிறை அரங்கமாகத் திகழ்கின்றது. இத்தனை சிறப்புக்கும், பெருமைக்கும் உரியவளான தமிழன்னைக்காக விழா எடுக்கும் எமது கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரி மாணவிகளின் இந்த "கலார்த்தனா" கலை விழாவானது தமிழை அலங்கரிக்கும் மகுடத்தில் தானும் ஒரு மணியாகப் பதியும் செயலாக அமைகிறது.

"செந்தமிழே! உயிரே! நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித்தேன்"

எனும் பாரதிதாசனின் பறைசாற்றலை மெய்யாக்க எமது தமிழ் இலக்கிய மன்றம் அயராது உழைத்தவற்றை கலை விழாவுக்கும், தமிழன்னைக்கும் சமர்ப்பித்துள்ளது.

முச்சங்கத்தை அலங்கரித்த தமிழ், மூவேந்தர் வளர்த்த தமிழ், இயல், இசை, நாடகம் என முத்தாக ஒளிரும் முத்தமிழ், இன்று இந்தச் சிறார்களின் இலக்கிய ஈடுபாட்டின் மூலம் "கலார்த்தனாவாக" எமது பாடசாலையின் தமிழார்வத்தையும், மாணவர்களின் செயலார்வத்தையும் பறைசாற்றுகின்றது.

மேலும் எமது இலக்கிய மன்றச் செயற்பாடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து எமக்கு வழிகாட்டியாக இருந்த எமது அதிபர், பிரிவுத் தலைவி, ஆசிரியப் பெருந்தகைகள், பெற்றோர்கள், மாணவிகள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

"வாழ்க தமிழ்! வளர்க தமிழ் இலக்கிய மன்றம்"

சிவகுமார் பிரிஸ்கிலா
தலைவர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயலாளரின் உள்ளத்து எண்ணங்கள்

"கனியிடை ஏறியசுளையாய்
முற்றல் கழையிடை ஏறிய சாறாய்
பனிமலர் ஏறிய தேனாய்
காய்ச்சு பாகிடை ஏறிய சுவையாய்"

தித்திக்கும் என்தாயாம் தமிழன்னையின் புகழாரம் சூட உயிரினில் பதிந்த தமிழ் உணர்வோடு என் எழுத்தினை, கல்வெட்டாய் என்றும் திகழப்போகும் இச்சஞ்சிகையில் பதிப்பதில் இதயங்கனிந்த உவகையடைகின்றேன்.

மொட்டாய் அரும்பிய காலத்தில் எம்மைத் தத்தெடுத்து மணம் வீசும் மலர்களாய் எம்மை இச்சமூகத்திற்குப் பரிசளித்த என் உயிரினும் மேலான நல்லாயன் மகளிர் கல்லூரித் தாயின் மகளாம், இன்று தமிழ் இலக்கிய மன்றத்தின் "கலார்த்தனா" எனும் பிரமாண்ட படைப்பின் செயலாளர் என்ற ரீதியில் இவ்வுரையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

எம் பாடசாலையின் முத்துக்களான மாணவர்களிடம் முத்தமிழான இயல், இசை, நாடகத்திறமைகளை வெளிக்கொணர்ந்து சிகரத்தில் தன் பெயர்களை நிலைநாட்ட அகரம் முதல் துளித்துளியாக முயற்சியெடுத்து இன்று மாபெரும் ஆழியாக விஷ்வரூபமெடுத்திருப்பதே, இக்கலார்த்தனா எனக்கூறுவதில் பெருமையடைகின்றேன்.

தமிழ்த்தாயின் இனிமையும் பெருமையும் அறிந்து எம்மைத் தோள்தட்டி கலார்த்தனாவிற்கு அத்திவாரமாக இருக்கின்ற எமது அதிபருக்கும், பொறுப்பாசிரியைக்கும் எமது தமிழ் இலக்கிய மன்றத்துக்கும் நன்றிகளை இதயத்தின் ஆழத்திலிருந்து சமர்ப்பிக்கின்றேன்.

எம் இன்பத்திலும் துன்பத்திலும் சுவாசம் போன்று கலந்திருக்கும் எம் பெற்றோருக்கும், கர்ணனைப் போன்று வள்ளலாய் வாரிவழங்கி நிதியுதவியளித்த நெஞ்சங்களுக்கும் நன்றி எனும் உணர்வை உள்ளத்தால் எடுத்தியம்புகின்றேன். அன்றும் இன்றும் போல் என்றும் எம் தமிழ் இலக்கிய மன்றமும் தமிழும் அழியா அடிச்சுவடாய்த் தொடர வாழ்த்துகின்றேன்.

"தமிழினை என்னுயிர் என்பேன்
தமிழும் நானும் மெய்யாய் உடலுயிர் என்பேன்"

சந்தனராஜ் ஸ்கொலஸ்டிகா
செயலாளர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்யா சங்கவி ஸ்ரீராஜன் | 12B வணிகப்பிரிவு

# உத்தமர்கள்

சூரியன் தன் தலையை எடுத்துக் காட்டும் காலப்பொழுதில் இலைகளின் மேல் பட்டும் படாமலும் இருந்த பனித்துளிகளை இரசித்துக் கொண்டிருந்த சித்தார்த்துக்கு, "சித்து … சித்து … பாடசாலைக்குச் செல்ல நேரமாகிவிட்டது" என்று தன் தாயின் குரல் காதை வந்தடைந்தது. "இதோ வாரேன் அம்மா" என்ற பதிலுடன் சித்தார்த் வீட்டிற்குள் சென்று பாடசாலைக்கு ஆயத்தமாகினான். பெற்றோரைத் தன் கண்கண்ட தெய்வம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் சித்தார்த் தன் பெற்றோரை வணங்கி வீட்டை விட்டுக் கிளம்பினான்.

பாதையோரத்தில் பிரவேசித்துக் கொண்டிருக்கும் சித்தார்த்துக்கு "ஏய் … சித்தார்த் … கொஞ்சம் நில்லு டா …" என்ற குரல் கேட்டது. சற்றுப் பின் திரும்பிப் பார்த்தான் சித்தார்த் தனது நண்பன் சந்தீப் வந்து கொண்டிருப்பதைக் கண்ட சித்தார்த் ஒரு நிமிடம் அங்கேயே நின்றான். பின்பு இருவரும் சேர்ந்து பாடசாலையை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

பாதை நடுவே மயங்கியிருந்த பெரியவரைக் கண்டதும் அதிர்ச்சியடைந்த சித்து "என்னடா உலகம் இது … இப்பெரியவரை யாரும் கண்டுகொள்ளாமல் செல்கின்றனரே அதுவும் அவர் பாதை நடுவில் மயங்கி விழுந்து இருக்கிறார். வா … சென்று அவரைத் தூக்கலாம்" என்றான். இதைக் கேட்ட சந்தீப் "யேன்டா உனக்குத் தேவையில்லாத வேலை…" என்று சித்து கூறினான். "சரிடா அப்ப நீயே அவர பாத்துக … எனக்கு நிறய வேல இருக்கு … அவரு எப்படிப் போனா எனக்கு என்ன? " என்று கூறிய சந்தீப் பாடசாலையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

பெரியவரை மதித்து அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு பாடசாலைக்குச் சென்ற சித்தார்த் தனது பாடங்களைத் தொடர்ந்தான். பாடசாலை இடைவெளி நேரத்தில் சந்தீப் சித்தார்த்திடம் "என்னடா அவன் இருக்கானா இல்ல செத்துடானா? " என்று கேட்டான். "அப்படிப் பேசாதடா…. " என்று சித்தார்த் கூறி முடிக்க முன் "ஆ … சரி … சரி… " என்று அலட்சியமாகக் கூறி விட்டு அந்தப் பக்கமாகச் சென்றான் சந்தீப்.

பாடசாலை முடிவடைந்ததும் சித்தார்த் அந்தப் பெரியவரைப் பார்க்க சில பழங்களை வாங்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றான். மற்றும் சந்தீப்போ தனது வீட்டிற்கு குதூகலமாகப் புறப்பட்டான். தன் தந்தையை இழந்ததைத் தெரியாமல் சந்தீப் வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்ததும் அவனை வாட்டிய துன்பம் அவனது தந்தையின் இறப்பு .. ஆம்… சந்தீப்பின் தந்தை இறந்து விட்டார். அதுவும் பாதையில் அனாதையாக இறந்து கிடந்தார் என்ற செய்தியைக் கேட்டதும் சந்தீப்பின் கண்களின் கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்தது. சந்தீப் கதறிக் கதறி அழுதான். அவனின் மனச்சாட்சி அவனை வாட்டியது. "அந்தப் பெரியவரையும் நான் கண்டுகொள்ளவில்லையே. அப் பெரியவரை நான் காப்பற்றியிருந்தால் அந்தப் புண்ணியம் என் தந்தையையும் காப்பாற்றியிருக்குமே …" என்று அழுதுகொண்டே இருந்தான்.

சில நாட்கள் கடந்து சென்றதும் தன் தவறை உணர்ந்த சந்தீப் உத்தமனாக மாறினான். சித்தார்த் எப்போதும் உத்தமனாகவே இருக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். அட்ஷயா | தரம் 11D

# பாசக்கயிறு

காலை ஏழு மணியிருக்கும் நித்திரை விட்டு எழுந்த சந்தோஷ் வேலைக்குச் செல்வதற்காக குளிக்கச் செல்ல நினைத்தான். நினைக்கத்தான் முடிந்தே தவிர போக முடியவில்லை. ஏனெனில் கொழும்பில் பிரபலமான அந்தக் கடையில் சிற்றூழியர்களாய் வேலை செய்யும் இவன் போன்று ஆறு ஏழு பேர், இவனுடன் இந்த அறையிலேயே தங்கி இருக்கின்றார்கள். அவர்கள் நேரகாலத்துடன் எழுந்திருந்தால் குளிக்கப் போனவர் திரும்பி வரும் வரை காத்துக்கிடக்க வேண்டிய கட்டாயத்தில், அனைத்தையும்துறந்த துறவியைப் போல் சுவரில் சாய்ந்து கொண்டிருந்தான்.

குளியல் அறை என்றால் அறையோடு இருக்கும் இணைக்கப்பட்ட குளியல் அறை என்றோ, சகல வசதிகளுடன் கூடியதாக இருக்கும் என்றோ எண்ணினால் அதற்கு யாரும் பொறுப்பல்ல. வசதியான இடத்தில் பிறந்து வளர்ந்த அவனுக்கு இப்படியெல்லாம் கஸ்டப்படுவது வேதனையாக இருந்தது.

மனதைக் கல்லாக்கிக் கொண்டு இவனைப் போலவே மற்றவர்களும் இருக்கின்றார்கள். சிலர் தம் சொந்த பந்தங்களைப் பார்க்கவிருக்கும் ஆசையை வெளிப்படையாகக் கவலையுடன் கூறுவதை இவன் பலமுறை கேட்டிருக்கின்றான். வருடத்தில் இரண்டு தடவைகள் போய், நான்கு ஐந்து நாட்கள் இருந்து விட்டு வருவார்கள். சிலநேரங்களில் போய் இரு நாட்கள் ஆகும் போதே கடையில் வேலை இருப்பதால் வருமாறும், வராவிட்டால் சம்பளம் வெட்டப்படும் என்றும் அவர்களுக்குத் தகவல் அனுப்பப்படுவதுண்டு.

இந்த வேலையை வீசிவிட்டுப் போவதென்றாலும் முடியவில்லை. வறுமை அவர்களைக் கட்டிப்போட்டிருந்தது. வேலை தேடுவதென்பது இலகுவான காரியமல்லவே. என்ன வாழ்க்கை? இரண்டு மூன்று வருடங்களாகவே இதேபோல் அடிமைத்தனம்.. உடம்புக்கு முடியாமல் படுத்திருந்தாலும் சம்பளம் வெட்டுவார்கள். இப்படியே நடந்தால் ஊழியர்களுக்கு என்ன மிஞ்சப்போகின்றது?

முதலாளி என்றால் இஷ்டப்பட்ட நேரத்துக்கு வீட்டுக்குப் போகலாம், சாப்பிடலாம், தூங்கலாம். ஏன் அதிகாரவர்க்கம் என்பதனாலா அவர்கள் மட்டும் தான் மனிதர்களா? தமது மனைவி பிள்ளைகளுடன் இரண்டு மாதங்களுக்கொரு முறை சுற்றுலா போவார்கள். ஆனால் கடையில் வேலை செய்யும் சிற்றூழியர்கள் ஞாயிறு தினங்களிலும் வேலை செய்து முதலாளிக்கு உழைத்துக் கொடுத்தாலும் ஓரிரு நாளாவது அதிகமாக விடுமுறை எடுத்துப் பிள்ளைகளுடன் இருந்து விட்டு வர முடியாத என்னவொரு கொடுமை?

உறவினர்கள் ஒவ்வொரு விடயங்களையும் விசும்பலுக்கும் விம்மலுக்கும் இடை இடையே அறியத்தரும் போது இந்த ஊழியர்கள் எவ்வளவு கவலைப்படுவார்கள்? அப்படி அவர்கள் கவலைப்பட்டு ஒடிந்து போய் இருக்கும் நேரங்களில் எல்லாம் இவனது நினைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டைச் சுற்றி ஆரத்தழுவி ஆர்ப்பாட்டம் போடும்.

அப்பா! கண்டிப்பு, கோபம், அன்பு எல்லாவற்றிற்கும் உறைவிடமானவர். அப்பா மீது சந்தோஷுக்கு மதிப்பு அதிகம். ஆனால் ஏழைகளை மதிக்காத அவர் குணம் மட்டும் சந்தோஷுக்குப் பிடிக்காது.

அம்மாவைப் பற்றிக் கேட்க வேண்டுமா? சிறு தலை வலிக்கும் என்னமாய்த் துடித்துப் போவார். அம்மா மிகவும் அழகானவரும் கூட. ஆனால் ரோஷம் மிக்கவர். அடிக்கடி அப்பாவிடம் சண்டையிடுவாள். அவர்களைப் புரிந்து கொள்ளவே முடியாது. என்ன இவர்கள்? எதற்காகச் சண்டை பிடிக்கின்றார்கள்.... காலையில் சந்தோஷமாக இருக்கின்றார்கள். இப்படி சந்தோஷ் நினைத்த போது அவனுக்கு வயது ஆறு இருக்கும். முதலில் புரிவிலலை. அவன் இளைஞனாகும் போது தான் அன்பின் ஊடுருவலும் தாற்பரியமும் அவனுக்குப் புரிந்தது.

மனித சமுதாயத்துக்குள் ஏழை, பணக்காரன் என்ற வேறுபாட்டைத் தோற்றுவித்த அந்தத் தீய சக்தி எது? அந்தப் பூதம் இப்பொழுது எங்கு போய் ஒழிந்துகொண்டது.? இந்தக் கேள்விகளுக்கு விடை தேடியே அலுத்துப் போயிருந்தான் சந்தோஷ்.

சந்தோஷின் அப்பா இரண்டொரு மாதங்களாகவே மிகவும் பதட்ட நிலையில் இருந்தார். அடிக்கடி கோபப்பட்டார். அவர் தனது வியாபாரத்தில் நஷ்டத்தைப் பார்த்தார். இறைச்சிக்கறிகள் வெறும் நெத்திலியாய் மாறிப்போயின. முதலில் வீட்டார் அனைவரும் கடின நிலையைச் சந்தித்தனர். அப்பா இப்படி மனதளவில் உடைந்து போயிருந்தாலும் அதனைக் கண்டு அறியாதவன் சந்தோஷ். அவர் இப்போது வயதாகி இருந்ததால் குடும்பப் பொறுப்பு யாவும் சந்தோஷின் தலை மீது வந்து விழுந்தது.

எனவே பத்திரிகை ஒன்றில் விளம்பரம் பார்த்து விட்டுக் கொழும்பில் பிரபலமான ஒரு கடைக்கு வேலைக்குப் போகவிருப்பதாய் வீட்டில் தெரிவித்தான். அம்மா "ஓ" வென்று கதறியழுதாள். தம்பி தங்கையரும் தான். அப்பா நெஞ்சை அழுத்திப் பிடித்தபடி அமர்ந்து விட்டார். "பணக்காரன்" எனும் அந்தஸ்து மகனைப் போக விடக்கூடாது என்று தடுத்தாலும் வயிற்றுப் பசி அந்த வரட்டுப் பிடிவாதத்தை விரட்டியடித்தது.

குடும்பத்தால் வீசப்பட்ட பாசக்கயிறுள் கட்டுண்ட சந்தோஷ், இப்போது மா மூட்டை தூக்க வேண்டும். இரவு பகலாக கடையில் வேலை செய்ய வேண்டும். உணவைப் பற்றி சொல்லத் தேவையில்லை. உப்புமிருக்காது புளியுமிருக்காது. இவ்வாறு தனது வாழ்க்கையை நினைந்து என்னென்னவோ சிந்தனைகள் அவன் உள்ளத்தில் அலை மோதின...

"என்ன கனவு காணுறியா? ....

உணவால் நிறைந்த வயிற்றைத் தடவியபடி அறைக்கே வந்து கேட்டார் முதலாளி, திடுக்கிட்டு எழுந்த சந்தோஷ் மெதுவாக நழுவினான். பல் விளக்கி, குளித்துவிட்டு வர குளியலறைக்குச் சென்றான். அவனது கன்னத்தில் கண்ணீர் கோடிட்டது. அது அவனுக்கு நெருப்புப் போல சுட்டது. அவன் அடிக்கடி இவ்வாறு கனவாகக் கண்ணீர் சொரிவதுண்டு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் பரிசு பெற்ற கட்டுரைகள்

எல்சா ஹங்ஷனி கிறிசோஸ்டம் | 7D

## மரம் வளர்ப்போம் பயன் பெறுவோம்

நாங்கள் மரங்கள் வளர்த்துப் பயன்பெறுவோம். நாம் மரம் வளர்த்தால் எமது சூழல் குளிர்மையடையும். நாம் எங்கள் வீட்டுத்தோட்டத்திலும் மரங்கள் வளர்க்க வேண்டும். இன்றேல் எமக்கு நிழலும் குளிர்மையும் கிடைக்காது. இப்போது நாம் மரங்களின் தீமையையும் நன்மையையும் பார்ப்போம்.

மரங்களால் எமக்கு நன்மையையும் தீமையையும் பெறலாம். நாம் இப்போது நன்மையைப் பார்ப்போம். மரங்கள் எமக்கு காற்று, நிழல், குளிர்ச்சி போன்றவற்றைத் தருகின்றன. இன்னும் எமக்கு உணவு, பழங்கள், சத்துக்கள், குடிபானங்கள், அலங்காரப் பூக்கள், சமைப்பதற்கு மரக்கறிகள் போன்றவற்றையும் எமக்குத் தருகின்றன. இந்த நன்மைகளை நாம் ஒழுங்காகப் பாதுகாக்க வேண்டும். இப்போது தீமையைப் பார்ப்போம். மழைக் காலத்தில் இடி முழங்கும் போது நாம் மரங்களிற்கு கீழே நிற்கக் கூடாது. ஏன் என்றால் இடி விழுந்து விடும். மண்சரிவு வரும் போது மரங்கள் கீழே விழுந்து மக்கள் அழிவார்கள். தீமையிலிருந்து நாம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். காடுகளில் மரங்கள் ஒன்றுடன் ஒன்று முட்டுப்பட்டு வெப்பம் நெருப்பாக எழும்.

ஆனால் இந்த நவீன காலத்தில் மனிதன் காடுகளில் இருக்கும் மரங்களை அழித்து வீடுகளையும் கட்டிடங்களையும் கட்டுகின்றான். பழைய கற்கால மனிதர்கள் மர இலைகளாலான வீடுகளைக் கட்டி மர இலைகளால் ஆடை அணிந்து, இலை குழைகளை உண்டு வாழ்ந்தார்கள். ஆனால் இப்போது வாழும் மனிதர்கள் மரங்களை அழிப்பதிலேயே குறியாக உள்ளார்கள்.

பழைய காலத்தில் மருந்தாக மரங்களைப் பாவிப்பர். அதனால் நாம் மரங்களை வெட்டாமல் அவைகளை வளர்த்துப் பயன்பெற்று வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலஸ் ஆன் நிஷியா

# இயற்கையைப் பாதுகாப்போம்.

இயற்கை இறைவனால் எமக்கு அளிக்கப்பட்ட சொத்து ஆகும். இதனைப் பாதுகாப்பது எமது முக்கிய கடமை ஆகும்.

நாம் இயற்கை என்று கூறும் போது தாவரங்கள், மலைகள், நதிகள், சமுத்திரங்கள், நீர் வீழ்ச்சிகள் போன்றவை இவற்றுள் அடங்கும். மனிதன் இவ் இயற்கை வளத்தில் இருந்து அதிக பயன் அடைகின்றான். ஆனாலும் மனிதன் நன்றி அற்றவனாகவே செயற்படுகின்றான். மலைகளைத் தகர்த்து கனிய வளங்களைப் பெறுகின்றான். தொழிற்சாலைக் கழிவுகளையும் குப்பை கூழங்களையும் ஆற்றுடன் கலக்கின்றான். சமுத்திரங்களில் பாரிய அணுகுண்டுச் செயற்பாடுகளைச் செய்து பார்க்கின்றான். இவ்வாறான மனித செயற்பாடுகளால் இயற்கை வளம் பாதிப்படைகின்றது.

மனிதனின் இவ்வாறான செயற்பாடுகளாலேயே உலகில் பல்வேறு அனர்த்தங்களும், அழிவுகளும் ஏற்படுகின்றன. இவ்வாறான அழிவுகளில் இருந்து நாம் வாழும் இப் பூமியை பாதுகாக்க வேண்டுமானால் இயற்கை வளத்தைப் பாதுகாக்க வேண்டும்

சூரியனில் இருந்து வெளிவரும் நச்சுக்கதிர்கள் எமது பூமிக்கு வராதவாறு பாதுகாப்பது படைமண்டலத்தில் காணப்படும் ஓசோன் படையே ஆகும். ஆனாலும் தற்போது அவ் ஓசோன் படை தேய்ந்து கொண்டு செல்கின்றது. இதற்குக் காரணமானவனும் மனிதன்தான். மனிதனால் அமைக்கப்பட்ட தொழிற்சாலையில் இருந்து வெளிவரும் புகை வாகனங்களில் இருந்து வெளிவரும் புகை இவ்வாறான காரணங்களினாலேயே ஓசோன் படை தேய்வடைகின்றது. இவ் ஓசோன் படை தேய்வதனால் சூரியனின் நச்சுக்கதிர்கள் புவியை வந்தடைகின்றது. இக்கதிர்கள் மனிதனின் உடலில் பட்டு புற்றுநோய் போன்ற குணமாக்க முடியாத நோய்களை உண்டாக்குகின்றன.

சில மனித செயற்பாட்டால் முழு மனித குலமே அழிவடைகின்றது. இவ்வாறான ஆபத்துகளில் இருந்து பாதுகாப்புப் பெறவேண்டுமானால் எமது இயற்கைச் சூழலைப் பாதுகாக்க வேண்டும்.

சமுத்திரங்களில் அணுகுண்டுப் பரிசோதனைச் செயற்பாடுகளால் தான் சுனாமி. நிலநடுக்கம் போன்ற பேரழிவுகள் ஏற்படுகின்றன. இவ்வாறான மனித செயற்பாடுகளால் பாதிப்படைவது மனிதன் மட்டும் அல்ல வாயில்லா ஜீவன்கள் மற்றும் இயற்கைச் சூழல் தொகுதியும் அழிவடைகின்றது. இவ்வாறான மனித செயற்பாடுகளால் இயற்கைச் சூழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் அன்றி வளிமண்டலமும் மாசடைகின்றது. இதனால் மனிதர்களாகிய நாம் உணர்ந்து மற்றவர்களைப் பற்றி சிந்தித்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும். தாவரங்களை அழிக்காது அவற்றிற்கு நீருற்றிப் பராமரித்தல் வேண்டும். குப்பை கூழங்களை ஆற்றுடன் கலக்காது அவற்றை மண்ணினுள் புதைத்தல் வேண்டும்.

இலங்கை வேடுவத்தலைவர் தஸ்ஸகாமினி "நான் இறக்கும் போது எனது இறுதி கிரியையை நடத்துவதற்காக இக்காட்டில் உள்ள மரங்களை வெட்டலாகாது." என்று கூறினார். நாமும் இவரைப் போல் இயற்கைச் சூழலை அன்பு செய்து அவற்றைப் பராமரித்துப் பாதுகாக்க பழகிக் கொள்ள வேண்டும்.

**"இயற்கைச் சூழலைப் பாதுகாப்போம்**
**பாரிய அழிவில் இருந்து விடுதலை பெறுவோம்"**

*எஸ். அட்ஷயா | 10D*

## வறுமைத் தீ

ஏழையின் வாழ்வின் விடையறியாப் புதிர்,
பற்றி வைத்த அணையாத தீ,
எளியர் வாழ்வின் கோரத் தாண்டவம்,
பணக்காரன் வாழ்விற்கு எட்டாத ஏணி,
நான்கு தலைமுறைகள் வரை உருக்குலைக்குமாம்,
நான்கு எழுத்துப் பிணி வறுமை!

வெள்ளப் பலகையில் அழியாத புள்ளி போல
ஏழை அவன் வாழ்வில் அழியாத வறுமை,
வாழ்வில் பரவும் காட்டுத் தீ!
சுட்டு எரிக்கும் கோரமான அனல்கள்,
சென்று சிதைக்கும் சிறிய இதயம்,
நித்திரை புண்ணானதே வறுமைத் தீயினால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். அட்ஷயா | தரம் 11D

# கைகளைக் கோர்ப்போம், இயற்கை அன்னையைக் காப்போம்!

மானிடராகிய எம்மைச் சுற்றி வர உள்ள மரங்கள், செடிகள், கொடிகள், விலங்குகள் போன்ற இயற்கைப் படைப்புகளே சுற்றுப் புறச் சூழலாகக் கருதப்படுகின்றது. நாம் வாழும் இச் சூழலானது மனிதர்களாகிய எமது தீர்க்க தரிசனமற்ற செயற்பாடுகளின் காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து, அப் பாரதூரமான இன்னல்களின் கொடிய விளைவுகளை வேறு வழிகளின் மூலமாக எம்மை வந்தடையச் செய்கின்றது என்பதே முற்றிலும் உண்மையாகும். இதற்கு சிறந்த உதாரணமாக மழை, புயல், நிலநடுக்கம், வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களைக் குறிப்பிடலாம்.

"கடுகு சிறிதானாலும் காரம் பெரிது" என்ற பழமொழியின் அடிப்படையிலேயே எமக்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் அன்னையை அவரது உருவத்தின் அடிப்படையில் மதிப்பிட்டு, இயற்கையின் கொடையான மரங்கள், காடுகளை அழித்தல், மண் அகழ்தல், கங்கையை அசுத்தப்படுத்தல், தீ வைத்தல், இயற்கைக்கு எதிரான பொலீத்தீன் போன்ற நச்சுத்தன்மை உடைய பொருட்களை உபயோகித்தல், ஆழ் கடல்களில் முத்து, சிற்பி போன்ற விலை உயர்ந்த பொருட்களை கொள்ளை அடித்தல் போன்ற பாரதூரமான குற்றங்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

எனினும் எம் அனைத்து தடைகளையும் வேரோடு கிள்ளி எறிந்து விட்டு, மீண்டும் எம் தாய் எமக்காக பணி புரிவதை அலட்சியப்படுத்தி மீண்டும் மீண்டும் எம் தவறுகளை ஆற்றிச் செல்வதனாலேயே அவள் சீற்றக் கடலில் அனலாய் கொந்தளித்து அபாரத் தீப்பந்தங்களான இயற்கை அனர்த்தங்களை எம்மை நோக்கி எறிகின்றாள். "அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது" என்பதைப் போலவே எம் மானிடர்கள் மீள முடியாத இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து தம் உடமைகளில் அனைத்தையும் இழந்து இறுதியில் தம் உயிர்களையே தியாகம் செய்கின்றனர்.

எனவே இதன் விளைவாகவே ஒன்றும் அறியாத பச்சிளம் குழந்தைகள் தம் உறவுகளை இழக்கின்றனர். வாய் பேச முடியாத மிருகங்கள் கொல்லப்படுகின்றன. வயோதிபர்கள், அநாதை ஆக்கப் படுகின்றனர். மக்கள் தமது வீடு வாசல்களை இழக்கின்றனர் என்பதை நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் மறந்து விடல் ஆகாது"

ஆகவே இக்கொடிய பிரச்சினையில் இருந்து நாம் விடுபடுவதற்கு ஒரு மரத்தை வெட்டினோமாயின் அதற்குப் பதிலாக மற்றுமொரு மரத்தை நாட்டல், அறியாமை, அலட்சியம் போன்ற தீய குணங்களைப் போக்கல், எம் தாய் மண்ணை அகழாது இருத்தல், நீரை அசுத்தப் படுத்தாதிருத்தல் போன்ற உயரமான காரியங்களை மேற்கொள்ளுவோமாயின் எம்மாலும் மகிழ்ச்சியான, திருப்தியான, சுகாதாரமான நன்மை பொருந்திய வாழ்வை முன்னெடுக்க இயலும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

"ஆழம் அறியாமல் காலை விடாதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலகரட்ணம் சுஜித்ரா | 12E விஞ்ஞானப் பிரிவு

# தொழில்நுட்பமும் மாணவர் கல்வியும்

வானோடு கலந்த நீலம் போல, நம் வாழ்வோடு தொழில்நுட்பமானது வியாபித்துள்ளது. தொழிற்நுட்பத்தால் மனிதன் பெறும் நன்மைகள் எண்ணிலடங்காதவை. இறைவன் படைப்பில் மிகச் சிறந்த படைப்பு மனிதன் ஆவான். அவனது அறிவாலும், ஆற்றலாலும் தொழில்நுட்பம் உலகம் திரும்பிப் பார்க்கும் அளவு வளர்ச்சி கண்டுள்ளது. தொழில்நுட்பமானது சகல துறைகளிலும் அதாவது வைத்தியத்துறை, விவசாயத்துறை, வணிகத்துறை, கல்வித் துறை போன்ற அனைத்துத் துறைகளிலும் ஊன்றுகோலாக விளங்குகின்றது.

இவற்றுள் கல்வித்துறை கண்ட வளர்ச்சி அளப்பரியதாகும். மணலில் எழுதப் பழகி பின், ஏட்டில் எழுதிய காலம் சென்று தற்போது அனைத்தும் தொழிநுட்பமயமாகி உள்ளது. அதே போன்றே, வைத்தியத்துறையை கருதுவோமானால் மூலிகைகளால் மருத்துவம் செய்து பின்னர் படிப்படியாக முன்னேற்றம் அடைந்தது. தற்போது அனைவரும் வியக்கும் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. அதுமட்டுமின்றி சிப்பி, உப்பு போன்றவற்றைப் பரிமாறி, பின் பண்டமாற்று முறை மூலம் வியாபாரம் நடைபெற்று, கைத்தொழில் புரட்சியின் தொழிநுட்ப வளர்ச்சியை அடுத்து, இன்று தொழில்நுட்பம் இல்லாத வணிகத்தை நாம் பார்க்க முடியாது.

தொழில்நுட்பமானது மாணவர் கல்வியில் ஆழமாக வேரூன்றி உள்ளது. முன்னைய காலங்களில் ஒரு கல்வி சார்ந்த தகவலைத் தேடிப் பெற நாம் பல புத்தகங்களையோ, பத்திரிகைகளையோ வாசித்துத் தகவல்களைப் பெற வேண்டும். ஆனால் அதே தகவலைத் தற்போது ஒரு சில நொடிகளில் இணையத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. இதனால், மாணவர்கள் அடையும் நன்மைகள் பல இன்று தொழில்நுட்ப யுகத்திற்கு ஏற்ப நேரச் சிக்கனமாவதால் அந்த நேரத்தில் மாணவர்கள் தங்காது பல கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியதாக உள்ளது.

முன்னர் கல்வியைப் பெறக் குரு அத்தியாவசியமான நபராக விளங்கினார். இன்று குரு / ஆசான் தேவை என்ற போதிலும் தனது அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிக்கும் அல்லது விடையைத் தன் வசம் வைத்திருக்கும் குருவாக இணையம் விளங்குகின்றது. அத்துடன் செய்முறைப் பரிசோதனைகள், போன்றவற்றையும் இணையம் மூலம் மாணவர்கள் தெளிவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. இவ்வாறு தொழில்நுட்பமானது மாணவர்கல்வியுடன் பிணைந்துள்ள விதத்தைக் கூறிக் கொண்டே செல்லலாம்.

மேலும், பொது அறிவு வளர்த்துக் கொள்ளல், எனப் பல வழிகளில் தொழில்நுட்பம் உதவுகின்றது. ஆனால் அனைத்துமே தொழில்நுட்ப மயமானதால் மாணவர்களின் தேடல் திறன் குறைவடைகின்றமை, சில தவறான தகவல்கள் என சில தீமைகளும் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், நாணயத்தின் இரு பக்கம் போல தொழில்நுட்பத்தால் மாணவர்களுக்கு நன்மைகளைப் போல சில தீமைகளும் விளைகின்றன. ஆனால் மாணவர்களாகிய நாம் நன்மைகளையே பெற்றுக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் பரிசு பெற்ற கவிதைகள்

சுவேதா | 8 D

## விடியல்

நான் என் வாழ்வில் ~ முதல்
முதல் கண்ட விடியல் இதுவே
எனது தாயின் கருவில் இருந்து
இவ் உலகைக் கண்டது ஒரு ~ விடியலே ...

மறுபடியும் ஒரு விடியல் என் ~ வாழ்விலே
முதல் முதல் என் தந்தை அவர்
தோளில் தூக்கிக் கொண்டு ~ சுற்றி
இவ் உலகைக் காண்பித்தது ~ விடியலே ...

இவ்வாறான பல விடியலுக்கு ~ பிறகு
என் கையைத் தாயும், தந்தையும்
பிடித்து இவ் ஒளிமையான ~ இப்
பாடசாலைக்குள் நுழைந்தும் ~ விடியலே ...

என் மங்கின இவ் அறிவை ~ மினுமினுப்பாக்க
என் வாழ்வில் தோன்றிய ~ தாயாக
தந்தையாக மாறிய ஆசிரியர்களோ ~ பல
அவர்களும் என் வாழ்வில் வந்த ~ விடியலே ...

என்னை இன்று உற்சாகப்படுத்த ~ என்
வாழ்வில் என்னோடு இணைந்த
ஏற்பட்ட நண்பர்களோ ~ என்
வாழ்வில் மலர்ந்த ~ விடியலே ...

இவ்வாறான பல விடியலோடு
என் வாழ்வைத் தொடர்ந்து
என்றும் செல்வேன் ...

என் முழுமையான ~ விடியலுக்காக
இரவு பகல் பாராமல்
ஓடி ஓடி ஒரு நாள் ~ என்
முழுமையான விடியலை அடைவேன் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர் ஷெஹானி

# உழைப்பால் உயர்வோம்

உள்ளமே! சிறகுகள் இல்லாமலே சிகரம்
தொட்டு விடு, உயர்வு என்பது கடல் போன்றது,
கரையில் தேடினால் வெறும் சிப்பியோடு திரும்புவாய்
மூழ்கித் தேடினால் பல முத்துக்களோடு வருவாய்,
உண்மையாய் உழைத்து உயர்ந்திடு,

விதை மண்ணில் விழ முளைக்கும் மரமாய்
விதையாய் உன் வியர்வை விழ மரமாய் எழு!
நீர்த் துளிகள் நிலம் விழுந்தால் தலை அசைக்கும்
பூப் போல், நீர்த் துளியான உன் உழைப்பால்
பாரினை வென்றிடு!

முடியாதது என ஒன்றுமில்லை, முயற்சியை விட
அரிய கருவியுமில்லை,
துயரம் கிடையாமல் பல உயரம் கிடையாது,
தலையை நீ குனிந்தால் அந்த வானம்
தெரியாது, முற்றுப் புள்ளி இன்றி உன் பயணம்
தொடர்ந்திட, வெற்றி உன் கரம் சேரும் வரை
ஒரு கண்ணால் தூங்கு,

எதிர்ப்புகள் உன்னை மூழ்க வைக்கும் நொடியிலும்
உழைப்பினால் எதிர் நீச்சல் அடித்து வென்றிடு
துன்பங்கள் யாருக்கில்லை, வரும் வெற்றியின்
ஏணி அது, நெஞ்சே! விண்ணகம் தொட்டிட
உழைப்பால் உயர்ந்து வென்றிடு இப்பாரினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல். லெரோஜா | 12B Arts

## வாழ்வின் தத்துவங்கள்

01. நிமிந்து நில் நிலவு உனக்கு நெற்றிப் பொட்டிடும்

02. யாரும் தோற்பதற்குத் திட்டமிடுவதில்லை
திட்டமிடுவதில் தான் தோற்று விடுகிறார்கள்.

03. நீ வெல்ல வேண்டும் என்பதற்காகத் தான் பூமி
உன் காலடியில் கிடக்கிறது.

04. உங்கள் பாதையை நீங்களே தேர்ந்தெடுங்கள்
ஏனெனில் வேறு எவராலும் உங்கள் கால்களைக் கொண்டு நடக்க முடியாது

05. நல்ல முடிவுகள் அனுபவத்தில் இருந்து தான் கிடைக்கிறது
ஆனால் அனுபவம் தவறான முடிவுகளில் இருந்து தான் கிடைக்கிறது.

06. சொற்களின் வலிமை அதை உச்சரிப்பதில் மட்டுமல்ல
சில இடங்களில் அதை உச்சரிக்காமல் இருப்பதில் தான் இருக்கிறது

07. கல்வியின் மகத்தான குறிக்கோள் கற்பதல்ல, தேடல்!
அறிவு அல்ல, செயல்!

08. பிறந்த குழந்தை கூட அழுகை என்னும் புரட்சி செய்து தான்
தன் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

09. நான் நன்றாகவே இருக்கிறேன் என்ற உணர்வு
எல்லாக் கடினமாக காலங்களையும் கடந்து வெற்றி பெற வைக்கும்.

10. நம்புங்கள் நிச்சயமாக நம்புங்கள்!
நான் வெற்றி பெறுவேன் என நம்புங்கள்!
வெற்றி உங்களை வந்தடையும்.

11. முடிவில்லாதது இரண்டு தான் இருக்கமுடியும்
ஒன்று பிரபஞ்சம் மற்றயது மனித முட்டாள்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவைப் பற்றிய பொன்மொழிகள்

- பானையில் தேனில்லா விட்டாலும் உன் நாவிலாவது அது இருக்க வேண்டும்.
- நாவால் அடிப்பவர்களை நாம் அறிவால் காக்கவேண்டி வரும்.
- உன் பற்களுக்குள்ளே உன் நாவை வைத்திரு.
- நீண்ட நா குறுகிய கைகளின் அடையலாகும்.
- நாவுக்கு எலும்பு இல்லாவிட்டாலும் அது எலும்புகளையெல்லாம் உடைத்து விடுகிறது.
- மனித நேயம் குறைந்தவரிடம் நீண்ட நாக்கு இருக்கும்.
- நாவின் கடி பாம்பின் கடியையும் விட விஷமுள்ளது.
- வாயை விடச் சொற்கள் தான் அதிகமாகப் புண்படுத்துகிறது.

## விழாக்கள்

- இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா
  **~ வெள்ளி விழா ~**
- ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா
  **~ பொன் விழா ~**
- அறுபதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா
  **~ மணி விழா ~**
- எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா
  **~ வைர விழா ~**
- எண்பதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா
  **~ அமுத விழா ~**
- நூறாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா
  **~ நூற்றாண்டு விழா ~**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. அருந்ததி | தரம் 7D

## தெரிந்து கொள்வோம்

- சர்வதேச ஒலிம்பிக் சங்கம் சுவிட்சர்லாந்திலுள்ள லோசேன் நகரில் அமைந்துள்ளது.
- உலகில் மிகப்பெரிய விமான நிலையம் தென் அரேபியாவில் அமைந்துள்ளது.
- தனக்கென ஒரு தாய்மொழியில்லாத நாடு சுவிட்சலாந்து ஆகும்.
- வரிக்குதிரைகள் ஆபிரிக்காக் கண்டத்தில் மட்டும் காணப்படுகின்றன.
- 1933ம் ஆண்டு லண்டனில் ஒக்ஸ்ஃபோட் ஆங்கில அகராதி முதன்முதலில் வெளியிடப்பட்டது.
- ஒட்டகம் ஒரு கிலோமீற்றர் தூரத்திலுருக்கும் தண்ணீரை எளிதாக கண்டுபிடிக்கும்.
- பென்சிலின் என்பது மருந்துகளின் அரசியாகும்.
- மனித உடலில் பலம் மிக்க உறுப்பு விரல் நகங்கள் ஆகும்.
- தன் வாழ்வில் நீர் அருந்தாத விலங்கு "கங்காரு எலி" ஆகும்.
- உலகில் மரகதத்தீவு என அழைக்கப்படும் நாடு அயர்லாந்து ஆகும்.

ஏ.சொன்ஸ்ரன் க்ளோடியா | 9D

## தமிழ்மொழி

தாய் மொழியாம் நம் தமிழ்மொழி !
பிறப்பிலிருந்து இறப்பு வரை
கற்று வரும் மொழியே தமிழ்மொழி!
பல வருடக் கணக்காக பேணி வரும்
நம் தாய்மொழியே!
சிறுவர் முதல் பெரியவர் வரை,
அ முதல் ஃ வரை
கற்று வரும் மொழியே!
நம் தாய் மொழி!
இத் தாய் மொழியை நாம்
மென்மேலும் வளர்த்து உயர்த்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்ஷாயினி பற்குணம் | தரம் 10 D

## கலைகளின் நாதன்

இசையிலும் அவன் உருவம்
நடன அசைவிலும் அவன் வடிவம்

கை வண்ணத்திலும் அவன் உருவம்
கற்சிற்பத்திலும் அவன் வடிவம்

கங்கையின் அசைவிலும் அவன் உருவம்
கன்னிப் பிறையிலும் அவன் வடிவம்

உடுக்கையின் ஒலியிலும் அவன் உருவம்
ஒளிப் பிழம்பிலும் அவன் வடிவம்

கைகசி மைந்தன் கானத்திலே
கைலாச நாதனும் மெய்மறந்தான்

கங்காதரனாம் அந்தக் கலைக்கூத்தன்
ஈஸ்வரன் என்றொரு கலையோகி

கலைகளின் நாதன் நடராஜன்
தில்லை அம்பலத் திருநாதன்

டீ.மைக்கல் ஷானிக்கா | 7D

## நற் சிந்தனைத் துளிகள்

01. உனக்கு உன்னை விடக்கொடிய எதிரியுமில்லை நல்ல நண்பனுமில்லை!
02. பேராசையின் முடிவே சந்தோசத்தின் தொடக்கம்!
03. நல்ல புத்தங்கள் நல்ல நண்பர்களை விட மேலானது!
04. ஆசை அவசியமானால் ஆண்டவனே உறவு தான்!
05. உண்மையான பக்தனுக்கு இறைவனும் அடிமை!
06. மனிதனை மதிக்கும் மனிதனையே இறைவன் நேசிப்பான்!
07. இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள்!
08. முயற்சி செய் பயிற்சி செய் வெற்றியடை!
09. கல்வியை மட்டுமின்றி ஒழுக்கத்தையும் கடைப்பிடி!
10. கல்வியை ஒரு நாளும் மறவாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோர்ஜ் அலெக்ஸாண்டர் கேஷா ஹார்லின் | 7D

## மரம்

மரமே நீ
வெயிலுக்கு நிழல்
எறும்புக்குப் பாதை
பறவைக்கு நிழற்குடை
சிலந்திக்கு வலை
மண்ணுக்கு உரம்
கொடிக்குப் பந்தல்,
கால் நடைக்கு உணவு
நோய்க்கு மருந்து
ஆயுதங்களுக்குக் கைப்பிடி
வீட்டிற்குக் காவலன்
வானுக்கு மழை
குடிசைக்குக் கூரை
தாகத்திற்கு நீர்
உயிர்களுக்கெல்லாம் உயிர்
உன்னை மறக்கலாமா?

துவாரகா ஆனந்தகுமார் | 7D

## தமிழ்

எண்ணுவதும் தமிழ்
எழுதுவதும் தமிழ்
ஏங்குவதும் தமிழுக்காக
தமிழ் எங்கள் தமிழ்
தென்றல் காற்றும் தமிழ்
தேன் எங்கள் தமிழ்
பாடுபடும் உழவனும்
பாட்டுக்கொரு புலவனும்
பாரதியும் தமிழ்
சங்க காலமும் தமிழ்
சங்கம் வளர்த்தவரும் தமிழ்
தமிழ் எங்கள் தமிழ்
தங்கத் தமிழை வாழ்த்துவோம்
வாழ்க வளர்க தமிழ் என்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒஷியா | 7D

## கல்விச் செல்வம்

ஆயிரம் செல்வம் முன்வைத்தாலும்
அதில் வெற்றி பெறும்
வல்லமையாளன்
நீ ஒருவன் தானே!

ஆயிரம் ரோஜா மலர்ந்தாலும்
அதில் முதல் மலர்பவன்
நீ ஒருவன் தானே!

ஆயிரம் கண் விழித்தாலும்
அதில் முதல் விழிப்பவன்
நீ ஒருவன் தானே!

ஆயிரம் கதவுகள் திறந்தாலும்
அதில் முதல் திறந்து வருபவன்
நீ ஒருவன் தானே!

ஆயிரம் கனி பழுத்தாலும்
அதில் முதல் கனிபவன்
நீ ஒருவன் தானே!

ஆயிரம் மழைத்துளி பொழிந்தாலும்
அதில் முதல் துளி
நீ ஒருவன் தானே!

என் இனிய கல்விச் செல்வமே
வாழ் நாளின் தூண்டு கோல்
நீ ஒருவன் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். ஷெரோன் | 7D

## பெண்ணே தடைகளைத் தாண்டி முன்னேறு

வையகம் பெற்றெடுத்த முத்து நீ
உன்னில் துடிப்பது எதையும் சாதிக்கும் இதயம்
நிலைத்து நிற்கும் சிகரம் நீ
கண்ணில் துணிவோடு போராடினால் கிடைக்கும் உதயம்

உன் பாதையில் கல்லும் முள்ளும் இருக்கலாம்.
சுமைகள் உன்னை இறுக்கலாம்
இவைகளைப் பொருட்படுத்தாது விழுந்தால் விதையாக இரு
எழுந்தால் மலையாய் எழு

சில மணி நேரம் வாழும் பூக்கள் சிரித்தவாறே மலர்கின்றன
பல வருடம் வாழப்பிறக்கும் மனிதன் அழுதுகொண்டே பிறக்கின்றான்
நீ கவலைப்படுவதால் உன்னில் ஒரு அங்குலம் கூடுமோ குறையுமோ
புன்னகைத்துப்பார் விண்மீன்கள் பகலில் தோன்றும்

வெற்றியின் வாழ்விற்கு வழியைக் கற்றுக்கொடுக்கும்
தோல்விகள் வாழ்வையே கற்றுக் கொடுக்கும்
சோதனைகளைக் கண்டு நீர்க்குமிழ் போல் உடையாதே
சாதனைகளைக் கொண்டு அழியாச் சூரியன் போல் நிலைத்து நில்

அன்பின் உச்சம் பண்பின் அடையாளம் பெண்மைக்கு அழகு
உன் உழைப்பில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்திடப் பழகு
காரிருளை நீக்கும் ஒளியாய் வாழ்ந்திடு
பாரே போற்றும் பெண்ணாய் உயர்ந்திடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. அனஸ்ரேசியா | 9D

# தமிழ்மொழி வாழ்த்து

✿ வாழ்க! வளம் பெற எம் ~ தமிழ்மொழி
வாழ்க! நீயே எம் ~ மகத்தான மொழி
அநாதியாய் பிறந்த எமக்கு, அம்மா
என்று கூறச் சொல்லிக் கொடுத்தாயே!
வாழ்க! உம் புகழ் என்றென்றும் வாழ்க!

✿ உன் பண்புகளைச் சொல்லிக்கொடுத்து
எமக்கு நீ அறிவூட்டினாயே!
வாய் திறந்து பேசத் தைரியம் ~ கொடுத்தாயே!
மேடையில் நின்று பேச உன் ~ மொழித்திறனை
கொடுத்தாயே! நீ வாழ்க!

✿ இன்று வரை நிலைத்திருந்து
உன் ஆட்சியைப் பலப்படுத்துகின்றாயே!
உனக்கெனப் பல நாடுகளையும்,
மக்களையும் தெரிந்து கொண்டாயே!
உன் புகழ் என்றும் நிலைத்திருப்பதாக!

✿ வாழ்க ! வாழ்க ! வாழ்க !
எம் தமிழ்மொழி என்றும் நிலைத்திருப்பதாக!
வாழ்க! வாழ்க! வாழ்க!
உன் புகழ் என்றும் ஓங்குவதாக!

✿ ✿ ✿



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.சுவேத்தா | 9D

## பாடசாலை

பண்பை எனக்கு கற்பித்து
பணிய வைத்தது பாடசாலை
புத்தகப் படிப்பு மட்டும் இன்றி
புத்திகள் புகட்டும் பாடசாலை

தெய்வம் போன்ற ஆசான்கள்
ஆசையாய் உலாவரும் பாடசாலை
நண்பர் பலரை எனக்களித்து
நட்பைத் தந்த பாடசாலை

கவலைகள் அனைத்தும் மறந்து நானும்
களிப்புடன் இருந்த பாடசாலை
படிப்பு மட்டும் தந்திடாது
பண்பை உணர்த்தும் பாடசாலை

மனித வாழ்வில் மறந்திடாத
மகிழ்ச்சி தந்த பாடசாலை
வாழ்வில் நாடு உயர்வு பெற
மதியாய் ஒளி தரும் பாடசாலை

ஆன் ரதீகா தேவதாசன் | 9D

## மனித நேயம்

அன்பின் வடிவே மனித நேயமடா
அதையுணர்ந்து செயலில் காட்டுங்கள்
ஆபத்திலுள்ளோர்க்கு உதவிடுங்கள்
அதுவே மனித நேயமாகும்!

இன, மொழி, மத பேதமின்றி,
இன்னாரை மதித்து வாழ்ந்திடுவோம்
இணைபிரியாமல் ஒன்றிடுவோம்,
இதுவே மனித நேயமடா!

உற்றார் உறவினர்களுக்கு உதவிடுவோம்,
உவகையுடன் செயற்படுவோம்,
உணவில்லாதோர்க்கு உதவிடுவோம்,
மனித நேயத்துடன் செயற்படுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்துணி (சுயசரிதை)

நான் இப்பொழுது பழந்துணியாகக் குப்பை மேட்டிலே கிடக்கின்றேன். என்னைக் கவனிப்பார் யாருமில்லை. இனி என்ன! என் முடிவு காலம் கிட்டிவிட்டதென எண்ணுகிறேன். மழை பெய்து என்னை உக்க வைக்கிறது. வெயில் தகித்து உருக்குலைக்க வைக்கிறது. என் இதயம் துன்பமிகுதியினாலேயே வெடித்து விடும் போலிருக்கின்றது.

என் கவலைகளை, என் அனுபவங்களை உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இதன் மூலமாவது எனது மனப்பாரம் குறையும். அதன் பின்பு நான் செத்து மடிந்து போகலாம். என் கதையை நீங்கள் கேட்க விரும்புகிறீர்களா? அப்படியானால் சரி ; சொல்லுகிறேன் கேளுங்கள்.

இலங்கையில் கண்டி என்னுமிடத்தில் பெரும் பருத்தி வயல் இருந்தது. அவ்வயலில் உள்ள ஒரு பருத்திச் செடியில் நான் தோன்றினேன். அப்போது என் நிறத்தைப் பார்த்தாலே கண் கூசும். பால் போன்ற வெண்மை நிறம். சிறது காலத்தின் பின்பு என்னையும் எனது நண்பர்களையும் பறித்த கூலியாட்கள் பொதிகளாக்கினார்கள். பின்னர் எம் அனைவரையும் இயந்திரசாலைக்கு அனுப்பினார்கள். எனக்கு ஒரே மகிழ்ச்சி.

இயந்திரசாலைக்கு வந்த சிறிது நேரத்தில் ஒரு கதை பரவியது. எங்களை இயந்திரங்களில் செலுத்தி விதைகளினின்றும் வேறாக்கப் போகிறார்களாம். நான் நடுநடுங்கிப் போய் விட்டேன். என் சந்தோசம் மறைந்தது. உண்மைதான். எங்களை இயந்திரங்களினுட் செலுத்தினார்கள். சிறிது நேரத்தின் பின் விதைகளினின்றும் பிரிக்கப்பட்டு வெவ்வேறு வழியாக வெளியே வந்தோம். இவ்வாறு பெறப்பட்ட எங்களுக்கு “பஞ்சு” எனும் பெயர் வைக்கப்பட்டது. பின்பு பல இயந்திரங்களினூடாகச் செலுத்தப்பட்டுத் தூய்மையாக்கப்பட்டோம். பின்னர் எங்களை மூன்றங்குலக் கனமுள்ள பாய்களாக அழுத்தினார்கள். வேறு இயந்திரங்களின் உதவியுடன் எம்மை மெல்லிய இழைகளாக்கிச் சுருள்களாக்கினர். இழைகளாலாக்கப்பட்ட எங்களைப் பெட்டிகளில் அடைத்து வேறு ஒரு இயந்திரசாலைக்கு அனுப்பினார்கள். அங்கே பலநிறச் சாயங்களில் ஊற வைத்தார்கள். பின்பு பல இயந்திரங்களினுதவியுடன் துணிகளாக நெய்யப் பட்டோம்.

இதுவரை அனுபவித்த கஷ்டங்களுக்கெல்லாம் ஒரு விடிவு காலம் வந்ததென்று நினைத்தேன். என்னையும் என் நண்பர்களையும் துணியின் வடிவிலே பார்க்கும் போது மிக அழகாக இருந்தது. எனக்கு என்னை நினைக்கும் போது பெருமையாகவும் இருந்தது. பின்பு துணிகளாக நெய்யப்பட்ட நானும் நண்பர்களில் சிலரும் கப்பல்களில் ஏற்றப்பட்டோம். எங்களுக்கு மிகவும் சந்தோசம். நண்பர்களுடன் பிரயாணம் செய்வதென்றால் கேட்கவும் வேண்டுமா? எங்களுக்கு எங்கே போகிறோம் என்று துறைமுகத்தில் இறங்கும் வரை தெரியாது. துறைமுகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கிய பிறகு தான் நாங்கள் இந்தியா வந்துள்ளோம் என்பது தெரிந்தது. எனது மனம் ஆனந்தக் களிப்பில் ஆடியது. இந்தியாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை முன்பு இருந்தது. அது நிறைவேறியதையிட்டு எனக்குச் சந்தோசம் எல்லை கடந்தது.

பின்பு நாங்கள் கடைகளுக்கு அனுப்பப்பட்டோம். அங்கு அலுமாரியில் வீற்றிருந்தோம். கடைக்கு வருபவர்கள் எல்லோரும் என்னையே பார்த்தார்கள். எனக்குப் பெருமைதாங்க முடியவில்லை. திரும்பி உட்கார்ந்து விட்டேன். அந்நேரத்தில் ஒரு பெண்மணி அங்கு வந்தார். என்னைக் காட்டி ஏதோ கூறினார். விற்பனையாளனும் என்னை எடுத்துக் காட்டினான். அவர் என்னைத் தொட்டுப் பார்த்தார். என்னை அவருக்கு மிகவும் பிடித்துவிட்டது. பின் பணத்தைக் கொடுத்து என்னைப் பெற்றுக் கொண்டார்.

நண்பர்களைப் பிரிகின்றேன் என்ற கவலை இருந்தாலும் அந்தப் பெண்மணியின் வீட்டிற்குச் செல்கிறேன் என்று நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது. அங்கு அவரின் சின்ன மகளுக்கு நான் சட்டையாக ஆக்கப்பட்டேன். அந்தச் சின்ன மகளின் மேனியை அலங்கரிப்பதில் நான் சொல்லொணாப் பேரின்பம் அடைந்தேன். அவள் பிஞ்சுக் கைகள் என்னைத் தொடும் போது நான் என்னையே மறந்தேன். அவள் எந்நேரமும் ஆசையுடன் அணிவாள். பாடசாலைக்கு அணிந்து கொண்டு செல்வாள். மாலையில் கடற்கரைக்குப் பெற்றோருடன் செல்லும் போதும் அணிந்து கொள்வாள். எனக்குப் பெரிய மகிழ்ச்சி. ஆறு மாத காலம் சந்தோஷமாக வாழ்ந்தேன்.

இவ்வாறு பலமுறை அணியப்பட்டுச் சலவை செய்யும் அவர்களது வேலைக்காரனால் கழிக்கப்பட்டேன். பின்னர் அவனாலே சிறிது காலத்தின் பின் விளக்குத் துடைக்கப் பயன்படுத்தப் பட்டேன். அதன் பின்பு குப்பை மேட்டில் எறியப்பட்டேன். இன்று யாரும் கவனிப்பாரில்லாமல் வாடுகிறேன். உயர்ந்த நிலையில் இருக்கும் போது மாத்திரம் பெட்டியில் பூட்டி வைத்து பாதுகாப்பார்கள். நிலை கெட்டு விட்டால் இப்படிக் கேவலப்படுத்துகிறார்கள். இனி என்ன? என் முடிவு நாளும் நெருங்கிவிட்டது. என் வாழ்வு வீழ்ந்து போனாலும் என் எசமான் குடும்பம் சுகத்தோடு வாழவேண்டும். அதுவே என் விருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டி. ஜெனீட்டா | 9D

# வகுப்புக் கதிரை (சுயசரிதை)

இப்பொழுது எனது பெயர் கதிரை. நான் கடந்த ஏழு ஆண்டுகளாக இந்த ஆறாம் வகுப்பில் இருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் இவ்வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்பிற்கு செல்கிறார்கள். ஆனால், எனக்கு ஏன் வகுப்பேற்றம் இல்லை? என்ன செய்யலாம்! என்னை மரம் என்று நினைத்து விட்டனர்.

நான் கதிரையாகுவதற்கு முன் அடர்ந்த வனமொன்றில் முதிரை மரமாக நின்றேன். ஒரு நாள் மரந்தறிப்போர் கூரிய வாளினால் என்னை அரிந்து வீழ்த்தினார்கள். கிளைகளை வெட்டினர். என் தோலை உரித்தனர். தாங்க முடியாத அத்துன்பங்களை எனது வலிமையாலே தாங்கிக் கொண்டேன். முதிரை மரத் துண்டுகளாய்க் கிடந்த என்னைத் தச்சன் ஒருவன் அரிந்தான். மரமான நான் துண்டுகளானேன். அவன் என்னை அழகாகப் பொருத்தி 'கதிரை' என்று பெயர் சூட்டினார். என்னை ஆக்கியவன் என்னைப்போல் பலரையும் உருவாக்கினான்.

நாம் அனைவரும் கல்வித்திணைக்களம் ஒன்றினால் பாடசாலைகளுக்குக் கொண்டு வரப்பட்டோம். அங்கே என்னை ஆறாம் வகுப்பிற்கு அனுப்பினார்கள். மாணவர்கள் எனக்கு நிறப் பூச்சுப் பூசி என்னை அழகாக வைத்திருந்தனர். கல்வி அறிவைப் பெற்ற மாணவர்கள் என்னை அனுசரிக்கும் அறிவை அறவே பெற மறந்து விட்டனர்.

எனக்கு ஏற்பட்ட இம்சைகளை எங்கு நான் சொல்ல. இப்பொழுது நான் கிழவியாகி விட்டேன். என் கால்கள் தள்ளாடுகின்றன. எனக்கு விரைவில் ஓய்வு கிடைக்கும். நானும் என் நண்பிகள் சிலரும் கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரியின் வாசலிலே புனித யூப் பிரேசியாவை வரவேற்க எதிர்பார்ப்புடன் காத்திருந்த அச்சம்பவம் மட்டும் என் வாழ்வில் என்றும் மீண்டும் பெறமுடியாது. உன்னத எண்ணங்களோடு அந்த ஆசியை எண்ணிய படியே எனது வயோதிபக் காலத்தைக் கழிக்கப் போகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேனையின் சுயசரிதை

நான் பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கும் போது ஒரு அழு குரல் கேட்டது. நான் "சுற்றும் முற்றும்" பார்த்தேன். யாரையும் காணவில்லை. யாரது என்றேன். ஒரு சத்தமும் இல்லை. நான் பயந்து போய் ஓட முற்பட்ட போது 'நில் நில் ஓடாதே! நான்தான் உன்னைக் கூப்பிட்டேன்" என்றது ஒரு உடைந்த பேனை. அதன் அருகில் சென்றேன். அது பேசத் தொடங்கியது.

நாடுவார் அற்றுத் தேடுவார் அற்று நடைபாதையிலே வீசப்பட்டிருக்கும் பேனைநான். இன்று தான் எனக்கு இந்த நிலைமை. ஆனால் நான் இருந்த இருப்பென்ன? எனக்கிருந்த மதிப்பென்ன? என் கடந்த கால வாழ்க்கையைக் கூறுகிறேன். கேள் என்று கதையைக் கூற தொடங்கியது பேனை.

நான் இலங்கைத் திரு நாட்டின் தலைநகரம் இருக்கும் கொழும்பில் பிறந்தேன். கண்ணாடி போன்ற மேனியையும் தலையில் நீலநிறத் தொப்பியையும் நீலநிறக் குருதியையும் கொண்டு என்னை அழகாக வடிவமைத்து இருந்தனர். என்னை உருவாக்கியவர்கள். எனது உடலில் "அட்லஸ் சூட்டி" எனப் பெயர் முத்திரை பதித்தார்கள். என்னுடன் சேர்ந்து எங்கள் இனத்தில் நிறையப் பேரை உருவாக்கினார்கள். பின்னர் எங்களைப் பன்னிரண்டு, பன்னிரண்டு பேராக ஒரு அழகிய சிறிய பெட்டியில் அடுக்கி, ஒரு பெரிய பெட்டியில் போட்டு பொதி செய்து லொறிகளில் ஏற்றினர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதிகளுக்குப் பிரிந்து வந்து விட்டோம். நான் இவ்வாறே அழகிய மலைநாடாம் இக்கண்டி மாநகருக்கு வந்தேன்.

இங்கே ஒரு புத்தகக் கடையில் எங்களை வாங்கிக் கண்ணாடிப் பெட்டியில் வைத்தனர். நானும் எனது தோழர்களும் பாதையில் செல்லும் வாகனங்களையும் சனக் கூட்டத்தையும் பார்த்து ரசித்துக் கொண்டிருப்போம்.

இப்படியிருக்கையில் ஒருநாள் கவிதா எனும் சிறுமியின் மாமா கடைக்கு வந்து அவளது பிறந்த நாள் பரிசாக என்னைத் தெரிவு செய்து அவருக்குக் கொடுத்தார். கவிதா என்னை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். என் அழகில் மயங்கி, "நன்றி மாமா, நன்றி மாமா" எனப் பலமுறை கூறி "அழகிய பேனை இதை யாருக்கும் நான் கொடுக்க மாட்டேன்" எனப் பத்திரமாக அவளது பென்சில் உபகரணப் பெட்டியில் வைத்துக் கொண்டாள். என்னை யாருக்கும் கொடுக்க மாட்டாள். எழுதிய நேரம் போக மற்றைய நேரங்களில் பெட்டியில் போட்டு பூட்டி வைத்து விடுவாள்.

இப்படித்தான் ஒரு நாள் பாடசாலையில் வைத்த உறுப்பெழுத்துப் போட்டி, கட்டுரை, சொல்வதெழுதல் எனப் பல போட்டிகளில் வெற்றி பெற்றாள். எல்லோரும் உன் எழுத்து முத்து முத்தாக உள்ளது என அவளைப் பாராட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதா மிகவும் சந்தோஷமாக இருந்தாள். அடுத்ததாக ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையும் வந்தது. என்னைக் கொண்டே அப்பரீட்சைக்குத் தோற்றினாள். அதிலேயும் பாடசாலைக்குச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொடுத்து, வெற்றி வாகை சூடி புகழ் மாலையைத் தனதாக்கிக் கொண்டாள்.

இதனால் மட்டில்லா மகிழ்ச்சியடைந்த அவள், என் இராசியான பேனையே! "உன்னால் தான் எனக்கு இவ்வளவு பேரும், புகழும்," என்று எனக்கு முத்த மழை பொழிந்தாள். நான் அவளது அன்பில் மூழ்கிப் போயிருந்தேன். இதனால் எனக்கு சிறிது செருக்கும் ஏற்பட்டது.

இந்தச் செருக்கே இன்று நான் இந்நிலைக்கு வந்ததோ என்னவோ தெரியவில்லை. எனவே நீங்கள் யாரும் ஆணவம் கொள்ளாதீர்கள் என்றது பேனை.

நான் ஆவலுடன் "சரி சரி" மேலே கதையைக் கூறு என்றேன். பேனை கதையை தொடர ஆரம்பித்தது.

இப்படி சந்தோஷமாகவிருந்த என் வாழ்க்கையில் அன்று இந்தச் சூறாவளி ஏற்படும் என நான் நினைக்கவேயில்லை.

கவிதா வழமைபோல் மாலை நேர வகுப்புக்குச் செல்லத் தொடங்கினாள். புத்தகப்பை திறந்திருப்பதை அறியாத அவள் வீதியைக் கடக்கும் போது இன்னொரு சிறுமியுடன் மோதியதில் பையிலிருந்த பென்சில் பெட்டி கீழே விழுந்து சிதறியது. பெட்டி திறந்து நான் தூரத்தே வீசப்பட்டேன். பெட்டியைக் குனிந்து எடுத்த அவள் என்னைக் காணாது சுற்றும் முற்றும் பார்த்தாள். என்னைக் கண்டதும் என்னைத் தூக்குவதற்காக ஓடி வந்தாள். அதற்குள் வேகமாக வந்த "உந்துருளி" என் மேல் கண் இமைக்கும் நொடியில் ஏறி மறைந்தது. நான் சுக்கு நூறாக நொருக்கப்பட்டு, குற்றுயிராய்த் துடித்துக் கொண்டிருந்தேன். கவிதா என்னைத் தூக்கி அவளது மடியில் வைத்துக் கொண்டு அழுது புலம்பினாள். அப்போது பக்கத்திலுள்ளவர்கள். எழும்பு! எழும்பு ஒரு பேனை உடைந்தற்காகவா இப்படி அழுகிறாய்? வாகனம் வருகிறது. உன்னையும் அரைத்து விடும் வா! வா! என அவளைக் கூட்டிக் கொண்டு சென்றனர். அவளது கையிலிருந்த என்னையும் தூக்கி வீசி விட்டனர். கவிதா என்னை விட்டு பிரியமனமில்லாமல் திரும்பித் திரும்பிப் பார்த்தாள்.

அவளைக் கடைக்குக் கூட்டிச் சென்றார் ஒரு பெண்மணி. அப்படி வீசப்பட்ட பேனை தான் நான் இன்றுதெருமுனையில் வீசப்பட்டிருந்தாலும் எனது கடந்த கால வாழ்க்கையை மனதில் அசை போட்டுப் பார்த்து ஆறுதல் அடைகிறேன், என்றது பேனை.

உனது கதையைக் கேட்டால் துக்கமாகத்தான் இருக்கிறது. சரி எனக்கும் பாடசாலைக்கு நேரமாகிவிட்டது. போய் வருகிறேன் எனப் பாடசாலையை நோக்கி விரைந்தேன்.

